வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 03.10.2023 - செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- நாட்டின் இயற்கை ஆதாரங்கள் மீது, ஏழைகளுக்கே முதல் உரிமை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மக்களுக்கான பல்வேறுத் திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி அமல்படுத்தி வருவதால், பிரதமரின் புகழ் நாளுக்கு நாள் அதகரித்து வருவதாக, மத்திய அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.
- மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், இன்று கோவையில், மொத்தம், 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான கடன் உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.
- புதுச்சேரியில், தெற்கு கிராமப்புற கோட்டத்திற்கு உட்பட்ட மின் நுகர்வோர் அனைவரும், உரிய நேரத்தில் மின் கட்டணம் செலுத்தி மின் துண்டிப்பை தவிர்க்குமாறு, மின்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

<u>*மோடி -1 (17)*</u>

நாட்டின் இயற்கை ஆதாரங்கள் மீது, ஏழைகளுக்கே முதல் உரிமை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தார் பழங்குடிப் பகுதியில் உள்ள ஜகதல்பூரில், பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், ஜாதி உள்ளிட்ட எல்லா வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டு, ஏழைகளின் நலனை மேம்படுத்த, அரசு தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளதாகவும், ஏழைகளுக்கும் எல்லா உதவிகளையும் வழங்குவதே அரசின் முன்னுரிமை என்றும் கூறினார். ஜாதி அடிப்படையில் நாட்டை பிளவு படுத்த, காங்கிரஸ் தொடர்ந்து முயன்று வருவதாக, பிரதமர் குற்றம் சாட்டினார். பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்கான மத்திய அரசின் உதவிகள், காங்கிரஸ் ஆட்சியின் போது வழங்கப்பட்ட அளவைவிட, 5 மடங்கு அதிக அளவில் தற்போது வழங்கப் படுவதாக, அவர் தெரிவித்தார்.

முன்பாக, 26 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், பஸ்தார் பழங்குடிப் பகுதிக்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார். பஸ்தார் பகுதிக்கு உட்பட்ட

நகர்நாரில், தேசிய கனிமவள மேம்பாட்டுக் கழகம் சார்பில் நிறுவப் பட்டுள்ள எஃகு உருக்காலை ஒன்றையும், அவர் நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். 24 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த அதி நவீன உருக்காலையில் உயர்தர எஃகு தயாரிக்கப்படும். இந்த ஆலை மற்றும் அதன் துணைத்

*மோடி -2 (12)*

தொழில்களால் ஆயிரக்கணக்கிலான வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜகதல்பூரில் இன்று பிரதமர் தொடக்கி வைத்த திட்டங்களில், ஜகதல்பூர் - தந்தேவாடா இரட்டை ரயில் பாதை, அந்தகார் – தரோக்கி இடையிலான புதிய ரயில் பாதையும், அடிக்கல் நாட்டிய திட்டங்களில், ஜகதல்பூர் ரயில் நிலையத்தை மேம்படுத்தும் திட்டமும் அடங்கும். தரோக்கி – ராய்ப்பூர் இடையிலான ரயில் சேவையையும், பிரதமர் கொடியசைத்து தொடக்கி வைத்தார். இத்திட்டங்களால் பஸ்தார் பழங்குடிப் பகுதியில் போக்குவரத்து இணைப்புகளும், பொருளாதார வளர்ச்சியும் வெகுவாக மேம்படும்.

இது அல்லாது, குங்குரியில் இருந்து, சத்தீஸ்கர் – ஜார்கண்ட் எல்லை வரை, புதிதாக அமைக்கப் பட்டுள்ள, தேசிய நெடுஞ்சாலைப் பிரிவையும், பிரதமர் இன்று நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.

*மோடி சேர்க்கை (6)*

தொடர்ந்து தெலங்கானா மாநிலம் நிஜாமாபாத்தில் இன்று நடைபெற்ற விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பலத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு 8 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும். தெலங்கானா ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், மத்திய அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

*அனுராக் -1 (18)*

மக்களுக்கான பல்வேறு திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி அமல்படுத்தி வருவதால், பிரதமரின் புகழ் நாளுக்கு நாள் அதகரித்து வருவதாக, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் கூறியுள்ளார். இன்று, புவனேஷ்வரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அண்மையில் வெளியாகி உள்ள

ஆய்வு முடிவுகளின் படி, பிரதமரின் புகழ் 78 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாகவும், கொடுத்த வாக்குறுதிகளை செயல்பாட்டு ரீதியில் நிறைவேற்ற பிரதமர் முக்கியத்துவம் அளித்ததே இதற்கு காரணம் என்றும் கூறினார்.
பெண்கள் உட்பட ஏழைகளின் நலனை கருத்தில் கொண்டதாகவே மோடி அரசின் திட்டங்கள் அமைந்து இருப்பதாகவும், அனைவருக்கும் வளர்ச்சி , அனைவருக்கும் ஆதரவு என்பதே அரசின் தாரக மந்திரம் என்றும் அவர் குறிப்பிட்டார்.
மத்திய திட்டங்களின் அமலாக்கத்தில், முறைகேடுகள் குறித்து மேற்கு வங்கத்தை போலவே, ஒடிசாவிலும் விசாரணைகள் விரைவில் தொடங்கும் என மத்திய அமைச்சர் தெரிவித்தார். பிரதமரின் வீட்டு வசதி திட்டம் தொடர்பான முறைகேடுகள் மீது மேற்கு வங்கத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.
முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுடன் ஒப்பிடுகையில், நடப்பு தேசிய ஜனநாயக கூட்டணி அரசால், ஒடிசா அரசிற்கு

*__அனுராக் -2 (4)__*

வழங்கப்பட்ட நிதியின் அளவு அதிகம்தான் என்று மத்திய அமைச்சர் தெரிவித்தார். பெண்களின் வாழ்க்கையில் மாற்றம் கொண்டு வருவதற்கான மத்திய அரசின் ஜல்ஜீவன் இயக்கம் ஒடிசாவில் விரைந்து அமல்படுத்தப் படுவதை, மாநில அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

*__முர்மு -1 (17)__*

டொமினிக்கன் குடியரசின் துணைத் தலைவர் திருமதி. ராக்வல் ரோட்ரிகஸ் இன்று புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவை சந்தித்துப் பேசுகிறார். முதல் முறையாக இந்தியாவிற்கு வருகை புரிந்துள்ள டொமினிக்கன் குடியரசுத் துணைத் தலைவரை, திருமதி. திரவுபதி முர்மு வரவேற்று பேசுகையில், இரு நாடுகளுக்கும் இடையிலான தூதரக உறவுகள் 25 ஆண்டுகளை எட்டியுள்ள நிலையில், இந்த வருகை மிகவும் பொருத்தமானது என்றார்.
ஜனநாயக மாண்புகள்மீதான நம்பிக்கையே இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் அஸ்திவாரம் என்றும், உலக அளவிலான பிரச்சனைகளில், இரு நாடுகளுக்கும் இடையே கருத்து ஒற்றுமை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.
லத்தீன் அமெரிக்காவில், இந்தியாவின் 8ஆவது மிகப் பெரிய வர்த்தக கூட்டாளி நாடாக, டொமினிக்கன் குடியரசு திகழ்வதை, அவர் சுட்டிக் காட்டி, இரு தரப்பு வர்த்தக

உறவுகளை மேலும் விஸ்தரிக்க பல வாய்ப்புகள் இருப்பதாக கூறினார். குறிப்பாக, மருந்து உற்பத்தி, கடல் சார் அறிவியல், பேரிடர் மேலாண்மை, டிஜிட்டல் பணப் பரிமாற்றம் உள்ளிட்ட துறைகளில், இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட முடியும் என்று அவர் தெரிவித்தார்.

*முர்மு -2 (3)*

இந்தியாவிற்கும் – டொமினிக்கன் குடியரசிற்கும் இடையே, தொடர்ச்சியான தொடர்புகள் மற்றும் பரிமாற்றங்கள் மூலம், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த முடியும் என இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

*நிலநடுக்கம் (7)*

நேபாளத்தில் இன்று, 4.6 மற்றும் 6.2 ரிக்டர் அளவில், 2 முறை நில நடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, டெல்லி உட்பட வட இந்திய பகுதிகளிலும், நில அதிர்வுகள் உணரப்பட்டன. நேபாளத்தில் முதலாவது நிலநடுக்கம் இன்று பிற்பகல் 2.25 மணிக்கும், இரண்டாவது நிலநடுக்கம் 2.51க்கும் பதிவாகின. பூமிக்கு 5 கிலோமீட்டர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நில அதிர்வுகளால் உயிருக்கோ – உடைமைக்கோ சேதம் ஏற்பட்டதாக தகவல் ஏதுமில்லை.

*நிர்மலா -1 (18)*

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், கோவையில் இன்று நடைபெற்ற விழாவில், மொத்தம் 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான கடன் உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். வளர்ச்சி ஆர்வம் அதிகமுள்ள மாவட்டங்களில், அரசின் எல்லாவிதமான உதவித் திட்டங்களையும் மக்களுக்கு வழங்க முன்னுரிமை அளிக்கப்படுவதாக, அவர் தெரிவித்தார். மக்களைத் தேடிச் சென்று கடன் வழங்கும் திட்டம் உட்பட, அரசின் பல்வேறுத் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை அதிகரித்தல் அவசியம் என்றும், குறிப்பாக கிராமப்புற விவசாயிகள் மற்றும், சிறு தொழில் முனைவோர், அரசின் கடன் மற்றும் மானியத் திட்டங்கள் குறித்து நன்கு அறிந்து கொள்ளத் தேவை இருப்பதாகவும் அவர் கூறினார். இன்று 23 ஆயிரத்து 800 பயனாளிகளுக்கு சில்லரைக் கடன் வழங்கப் படுவதாகவும், 2 ஆயிரத்து 904 புதிய பயனாளிகள் முத்ரா கடன் பெறுவதாகவும் அவர் தெரிவித்தார். Standup India திட்டத்தின்

கீழ், கிராமப்புற இளைஞர்கள் 18 பேருக்கு கடன் வழங்கப் படுவதாகவும், இவர்களில், SC – ST பிரிவினர் மற்றும் பெண்கள் அடங்குவர் என்றும் அவர் கூறினார்.
கோவையில் 2 ஆயிரத்து 500 சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப் பட்டுள்ளதாகவும், வங்கிக் கணக்கு வைத்துள்ள 1 லட்சம் பேர், பல்வேறு திட்டங்களின் கீழ் கடன் பெற உள்ளதாகவும், நிதியமைச்சர்

*__நிர்மலா -2 (12)__*

தெரிவித்தார். கிஸான் அட்டை வைத்துள்ள விவசாயிகள் கடன் உதவி கோரியும் அரசுக்கு விண்ணப்பிக்கலாம் என்று, அவர் கூறினார்.
மேல் வரி மூலம் அரசுக்கு கிடைக்கும் வருவாய், சாதாரண மக்கள் பயன்பெறும் வகையில், நாடெங்கிலும் உள்ள பன்நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு செலவிடப் படுவதாக, நிதியமைச்சர் தெரிவித்தார். வரிவருவாய், மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்ளப் படுவதாகவும், மேல்வரி மூலமான வருவாய், சமுதாயத்தின் அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில், பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்தப் படுவதால், இதில் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக எதுவும் இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.
முன்னதாக, கோவையில் இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கியின் புதிய கிளையை மத்திய நிதியமைச்சர் திறந்து வைத்து, தூய்மையே சேவை இயக்கத்திலும் பங்கேற்றார்.

*__ஸ்டாலின் (17)__*

கள்ளச் சாராயம் மற்றும் போதைப் பொருட்களை அறவே ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார். சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று நடைபெற்ற, மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில், அவர் பேசுகையில், கள்ளச் சாராயம் மற்றும் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடும் குற்றவாளிகளை, இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என்றார். சாலை விபத்துக்களால் அதிக உயிரிழப்பு ஏற்படும் மாநிலமாக தமிழகம் இருப்பது குறித்து முதலமைச்சர் கவலை வெளியிட்டார். காவல், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையினர் ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் சாலை விபத்துக்களை குறைக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் நடவடிக்கை எடுப்பதில், எவ்வித சமரசங்களுக்கும் இடமளிக்கக் கூடாது என்று தமிழக முதலமைச்சர் வலியுறுத்தினார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்முறைகள் குறித்து இவர்கள்

அரசுக்கு தகவல் கொடுக்க, பிரத்யேக வாட்ஸ்-அப் மற்றும் தொலைபேசி எண்களை மாவட்ட ஆட்சியர்கள் அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

***<u>மின்துறை (10)</u>***

புதுச்சேரி அரசின் மின்துறை, வரும் 5ஆம் தேதி முதல், தீவிர மின் துண்டிப்புப் பணிகளை மேற்கொள்ள இருப்பதால், தெற்கு கிராமப்புற கோட்டத்திற்கு உட்பட்ட, அரியாங்குப்பம், தவளக்குப்பம், கிருமாம்பாக்கம், பாகூர், கரிக்கலாம்பாக்கம், வடமங்கலம், திருவண்டார் கோயில், வாதானூர், கரியமாணிக்கம், மற்றும் கரையாம்புத்தூர் பகுதிகளைச் சேர்ந்த மின் நுகர்வோர் அனைவரும் மின் கட்டணம் மற்றும் நிலுவைத் தொகையை உரிய நேரத்தில் செலுத்தி மின் துண்டிப்பை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். மின் இணைப்பை துண்டிக்க நேர்ந்தால், நிலுவைத் தொகையை முழுமையாக செலுத்திய பின்னரே மீண்டும் மின் இணைப்பு வழங்கப் படும் என்றும் மின்துறை தெரிவித்துள்ளது.

***<u>ஆசிய விளையாட்டு (10)</u>***

சீனாவில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், இந்தியா இதுவரை 64 பதக்கங்களை வென்று, பதக்கப் பட்டியலில், 4ஆவது இடத்தில் உள்ளது. 14 தங்கம், 24 வெள்ளி, மற்றும் 26 வெண்கலப் பதக்கங்கள் இதில் அடங்கும். ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் மகளிர் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் இந்தியாவின் பாருல் சவுத்ரி, தங்கப் பதக்கம் வென்றுள்ளார். வீரர் – வீராங்கனைகளின் அபார வெற்றிகளுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

<u>வானிலை (9)</u>

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் 9ஆம் தேதி வரை, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், நெல்லை, குமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தென் தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக் கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இன்றும் நாளையும், இப்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

*விமானப்படை (19)*

இந்தியா, உளவு – புலனாய்வு மற்றும் கண்காணிப்பு மூலம், எல்லைக்கு அப்பால் உள்ள நிலவரங்களை தொடர்ந்து கண்காணித்து வருவதாக, இந்திய விமானப்படையின் தலைவர் ஏர் சீஃப் மார்ஷல் வி.ஆர்.சவுத்ரி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்திய படைகளின் செயல்பாட்டுத் திட்டங்கள், அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தொடர்ந்து மாற்றப் படுவதாகக் கூறினார். இந்திய விமானப் படையின் போர்த் திட்டங்கள், மிகுந்த நெகிழும் தன்மை கொண்டவை என்றும், அவர் தெரிவித்தார். விமானப் படையின் போர் ஆயத்த நிலை குறித்து அவர் பேசுகையில், 83 இலகுரக போர் விமானங்களை வாங்க ஏற்கனவே ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டுள்ளதாகவும், இத்தகைய மேலும் 97 விமானங்களை வாங்க உத்தேசிக்கப் பட்டுள்ளதாகவும் கூறினார். வரவிருக்கும் ஆண்டுகளில், 156 இலகுரக ஹெலிகாப்டர்களும் வாங்கப்படும் என அவர் தெரிவித்தார். மொத்தம் 6 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், போர் விமானிகளுக்கான 70 பயிற்சி விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றையும் விமானப் படை இறுதி செய்திருப்பதாக திரு. சவுத்ரி தெரிவித்தார். இந்திய விமானப் படையின் மொத்த கொள்முதல் செலவுகள், வரவிருக்கும் ஆண்டுகளில், சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் முதல், 3 லட்சம் கோடி வரை இருக்கும் என்றும் அவர் கூறினார்.

*அபுதாபி (12)*

அபுதாபியில், 164 நாடுகளின் பங்கேற்புடன் நேற்றுத் தொடங்கிய, சர்வதேச பெட்ரோலியம் கண்காட்சி மற்றும் மாநாட்டில், சுற்றுச் சூழலுக்கு உகந்த எரிசக்தி தீர்வுகள் குறித்து, இந்தியாவின் சார்பில் அமைக்கப் பட்டுள்ள அரங்கு, அனைவரின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்து வருகிறது. இந்தியாவில் இருந்து எரிசக்தித் துறை சார்ந்த பல்வேறு நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள், மற்றும் புதுமை படைப்பாளர்கள் இதில் கலந்து கொண்டு, நீடித்த எரிசக்தி எதிர்காலத்திற்கான தங்களின் தீர்வுகளை காட்சிப் படுத்தி உள்ளனர். புகையில்லா எதிர்காலத்தை அனைவரும் ஒருங்கிணைந்து, விரைந்து உருவாக்குதல் என்னும் கருப்பொருள் அடிப்படையில், வரும் 5ஆம் தேதி வரை நடைபெற உள்ள இக்கண்காட்சி மற்றும் மாநாட்டில், 164 நாடுகளில் இருந்து, சுமார் 1 லட்சத்து 60 ஆயிரம் பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள்.